# பெண்ணியக் கோட்பாடுகளும் தத்துவங்களும்

*பேரா. மா. சேகர்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5046

*மனிதர்கள் மதிக்க தகுந்தது மதம். ஒழுக்கத்தின் வழி மானுட சமூகத்தை மேன்மை அடைய வைப்பது மதம் என்று குறிப்பிடுவர். மதம் மனிதர்களிடம் நல்லிணக்கதை ஏற்படுத்துவதிற்குப் பதிலாக சுரண்டலையும், ஆதிக்க கருத்தியலையும் கொண்டிருந்தால் அதனை இடித்துரைக்க வேண்டும். மதத்தின் பேரால் நிகழ்த்தப்படும் பாலின ஏற்றத்தாழ்வை பெண்ணிய எழுத்தாளர்கள் கண்டித்துப் படைப்புகளை வெளிக்கொணர்ந்தனர். பெண்ணிய ஒடுக்கு முறையைத் தத்துவார்த்தமாக எதிர்த்தனர். இது குறித்து கட்டுரையில் ஆராயப்படுகிறது.*

*பெண்களுக்குச் சாதகமாக எந்த மதமும் இல்லை என்னும் கருத்தியலை பெண்ணிய ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். மதங்கள் பெண்கள்மீது உள்ள தங்களுடைய பார்வையை மாற்றியமைத்திட வேண்டும். மதங்கள் அனைத்தும் பழமையான வழிமுறைகள், தத்துவங்களை மாற்றிட வேண்டும். பெண்களுக்கு பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும் என பெண்ணியவாதிகள் வாதிடுகின்றனர்.*

*மதம் பெண்கள்மீது ஒரு சுரண்டல் முறையைக் கையாளுகிறது. பெண்களுடைய பங்கு மதத்தில் அதிகமாக இருந்தாலும், ஆண் ஆதிக்க சிந்தனை மதங்களில் திணிக்கப்படுகிறது. பெண் என்றால் குழந்தை பெறுதல், தாய்மை அடைதல் என்னும் வாழ்க்கை முறையை மதம் தீர்மானிக்கிறது. பெண்கள் மதங்களால் புறக்க ணிக்கப்படுகிறார்கள். பெண்ணிய முன்னேற்றத்திற்கு மதங்கள் தடையாக இருக்கின்றன. இது கோட்பாட்டளவில் இயங்கி வருகிறது.*

**பாலினம், மதம், கடவுள்**

பாலினம் மற்றும் கடவுள் பற்றிய விவாதங்கள் பல்வேறு இடங்களில் வேறுபட்டுக் கொண்டு வருகின்றன. முன்னர் கூறியபடி கடவுள் ஆணாக இருக்க முடியும் என்று பல மதங்கள் கூறுகின்றன.

பெண்ணியவாதிகளின் கருத்து அடிப்படையில் பெண் தெய்வங்களைப் பின்பற்றுபவர்கள் எண்ணிக்கை குறைவு. ஆண் தெய்வங்களுக்கே அதிக முக்கியத்துவம் சமூகத்தில் வழங்கப்படுகிறது.

பெண் தெய்வங்களை பொதுவாக மென்மையாகவும், செல்வங்கள், செழிப்பு, தாய்மையடைதல், அழித்தல், நோயை உண்டாக்குதல் போன்ற செயல்களுக்கு மட்டுமே உரியவர் என சித்தரிக்கவும் செய்கின்றனர். இதுபோன்ற முரண்பாடுகள் மேற்கத்திய மதங்களிருந்து உருவானவை. பழமையான பழக்க வழக்கங்களால் உருவாக்கப்பட்டவை.

காலத்திற்கு ஏற்ப மதங்கள் ஆண், பெண் தெய்வங்களை உருவாக்கின. இவை அனைத்தையும் பின்பற்றும்பொழுது இதற்கான முரண்பாடுகள் தொடங்குகின்றன. ஆண் தெய்வங்கள் மிகவும் சக்தியடைந்தவர்களாவும், பெண் தெய்வங்கள் மென்மையானவர்களாக உருவாக்கப்பட்டன. பெண் தெய்வங்கள் இவ்வாறு சித்தரிப்பது ஒரு தவறான சுரண்டல் முறையே. இது ஆணாதிக்கச் சமுதாய சிந்தனையை கடவுளுக் கிடையேயும் நிலவச் செய்கின்றன.[2]

பெண்கள் இஸ்லாமியத்தில் முழு சமத்துவம் பெறுவதே இதன் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது. பாலின வேறுபாடுகள் இன்றி பொது வாழ்க்கை மற்றும் தனிநபர் வாழ்க்கையில் பெருமளவு சமத்துவம் பெற வேண்டும் என்கின்றது. பெண்ணுரிமைகள், பாலின சமத்துவம், சமூக நீதி போன்றவை இஸ்லாமிய கட்டமைப்புகளுக்குள் வர வேண்டும் என இஸ்லாமிய பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்.

மதத்தின் அடிப்படையில் பெண்கள்மீது அடக்குமுறை, வன்முறை, ஆடை கட்டுபாடு போன்ற செயல்களில் பாலின வேறுபாட்டை காட்டி வருகிறது என்று பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். ஆகவே பல பெண்கள் இதற்காகப் போராட வெளியே வரவும் செய்கின்றனர்.[3]

பண்டை இந்து மதத் தத்துவத்தில் பெண்டிமைத்தனம் பற்றியக் குறிப்பு இல்லை. ரிக் வேதத்தில் பல பெண்கள் ரிஷிகளாக இருந்துள்ளனர். பல ஸ்லோகங்கள் பெண்களை அடிப்படையாகக்கொண்டு உச்சரிக்கப்படுகிறது. சமணம், சைவம், வைஷ்ணவமாக இந்து மதம் பிரிந்தபொழுது, பெண்ணிய வழிபாடு முறையான சக்தி வடிவம் உதயமானது. பெண்களுடைய வழிபாட்டு முறைகள் மற்றும் பெண்கள் அனைவரும் புகழ், பொருள், வளம், சத்தியம் போன்றவற்றிற்கு நிகரானவர்களாகக் கருதப்பட்டனர். நவீனக் காலகட்டங்களில் இவை அனைத்தும் எதிர்மறையாக இருந்து வந்துள்ளது. கலாச்சாரம் என்ற பெயரில் ஆண்கள் பெண்கள் மீது வன்முறை, அடக்குமுறை உள்ளிட்ட பல கொடுமைகளைச் செய்கின்றனர் எனப் பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்.

பெண், ஆணுக்கு நிகரானவர் என்பது சீக்கிய மதத்தின் தத்துவமாக இருக்கிறது. பெண்கள் தற்காப்பிற்காகக் குருவாள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சீக்கியம் கூறுகின்றது. மேலும் பெண்களை இழிவாக நடத்தக் கூடாது; சுயமரியாதையுடனும், பண்போடும் நடத்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

சீக்கிய மத குருவான குருநானக் பெண்ணைப் பற்றி கூறும்பொழுது, ஒரு பெண்ணிலிருந்து ஆண் உருவாகிறான்; ஒரு ஆண், ஓர் பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறான். அவ்வாறு நடக்கும் பொழுது பெண், ஆணுடைய தோழியாகிறாள். பெண்ணின் மூலம் புதிய தலைமுறையை உருவாக்கித் தருகிறாள். ஆனால் அவள் இறந்துவிட்டால், ஆண் இன்னொரு பெண்ணை நாடிச் செல்கிறான்; அவளுடன் குடும்பம் நடத்துகிறான். இதனால் பெண்ணை ஏன் தவறாக என்ன வேண்டும். பெண்ணிலிருந்து பல ராஜாக்கள், இளவரசர்கள் பிறக்கிறார்கள். பெண்ணிலிருந்து பெண் பிறக்கிறாள். எனவே பெண்ணில்லாமல் யாரும் இருக்க முடியாது என்று கூறுகிறார்.[5]

சீக்கிய மதங்களில் பெண்ணிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு இருந்தாலும் பெண்களை ஆண்கள்

சமமாக கருதுவதில்லை. இதன் விளைவு பெண்களுடைய எண்ணிக்கை ஆணுக்கு நிகராக இல்லை.

கிறித்துவத்திலும் பெண்கள் விலக்கம் செய்யப்பட்டு வந்துள்ளனர். கிறிஸ்துவத்தின் பைபில் ஆணின் விலா எலும்பிலிருந்துதான் பெண் படைக்கப்பட்டாள் என்கிறது. ஆணுக்குக் கட்டுப்பட்டவள் பெண் என்னும் கருத்தியலைக் கொண்டிருக்கிறது. பெண்ணிய நடத்தை முறையில் கிறிஸ்துவம் இந்து மதத்தின் பின்னிணைப்பாகச் செயல்படுகிது.

### மதங்களில் பெண்களின் உரிமை

மதங்களில் பெண்களுடைய நிலையானது மிகவும் பின்தங்கியும் சரியான பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கிறது. பெண்களை கவுரவமாக நடத்துவதில் ஒன்றோடு ஒன்று முரண்படுகின்றன.

இந்து மதத்தில் பெண்களுடைய நிலை முரண்பாட்டிற்குரியது. பெண்கள் இம்மதத்தில் வெவ்வேறு வகையில் சுரண்டப்பட்டும், அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்து மதக் கோட்பாடு அடிப்படையில் சில முரண் பாடுகளை அறிஞர்கள் முன் வைக்கின்றனர்.

1. பெண் விவாகரத்து செய்யும் உரிமையற்றவர்.
2. சொத்துரிமை அல்லது பூர்வீகச் சொத்துக்கள் மீது உரிமை கொண்டாட இயலாது.
3. கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மிகவும் குறைவு. ஒரே சாதியில்தான் திருமணம் முடிக்க வேண்டும். ஜாதகப் பொருத்தம் அனைத்தும் பொருந்தி இருந்தால் மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும்.
4. பெண் வீட்டார் வரதட்சணை மற்றும் பிற சடங்குகளை அதிகளவு செய்திட வேண்டும்.
5. குழந்தைத் திருமணம் அதிகளவு ஊக்கவிக்கப்படுகிறது.
6. மறுமணம் செய்வதே தவறு.
7. விதவைகள் சபிக்கப்பட்டவர்கள், அவளுடைய மகன், மகளுடைய திருமணத்தில் பங்கேற்பதும் தவறு. 6

இந்து மதத்தில் பெண்களைப் பற்றி இவ்வாறு கூறியிருந்தாலும், சொத்துரிமை, மறுமணம், குழந்தைத் திருமண தடை போன்றவை நடைமுறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. எனினும் சொத்துரிமை, மறுமணம் போன்றவை மறுக்கப்பட்ட ஒன்றாகவே இன்றளவும், பின்பற்றப்படுகிறது. குழந்தைத் திருமணம் இன்றும் பல்வேறு சூழல்களில் நடைமுறையில் இருந்து கொண்டே இருக்கிறது. காலமாற்றத்தால் பெண்ணுரிமை பேசும் சனநாயக வெளி இம் மதத்தில் உள்ளது.

### இஸ்லாம்

இஸ்லாம் மதத்தில் பெண்களுடைய நிலைப்பாடு என்பது மிகவும் பின்தங்கிய நிலையென்றாலும், அதில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் பெண்களுக்கு ஆதரவான கருத்தியல் ஆகும். படிப்பறிவு, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற சமுதாயப் பாகுபாடுகள் இருந்தாலும் பெண்களுடைய நிலையை மிகவும் தெளிவாக வெளிக்காட்டுகிறது. "முத்லக்" என்னும் முறை பெண்ணடிமைத்தனத்திற்கு முக்கிய சான்று ஆகும். அண்மையில் இந்திய நாடாளுமன்றம் முத்லக் முறையை ரத்து செய்தது. முக்காடு அணிதல், பெண் கல்வி மறுப்பு உள்ளிட்ட பிற்போக்குத் தன கூறுகள் இஸ்லாத்தில் காணப்படுகின்றன.

### கிறித்தவம்

கிறிஸ்தவம் உலகளவில் பின்பற்றப்படக் கூடிய மதமாகும். இதில் பெண்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது

விவாதத்திற்குரியது. பெண்ணுரிமை என்பது ஒரு பெண்ணின் விடுதலை உணர்வாகும். ஆனால் பெண்களுடைய நிலை பாரபட்சம் கொண்டதாக இருக்கிறது.

1. பெண்களுடைய நிலை என்பது மிகவும் தாழ்ந்ததாகவும், ஆணுக்கு நிகரானவர்கள் கிடையாது என்கிறது.
2. பிற மதங்களைப்போல் பெண்கள் தங்கள் வழிபாடுகளை தானாகவே செய்து கொள்ளலாம். ஆண், பெண் வழிபாடு என்ற பாகுபாடு கிடையாது.
3. பெண்கள் துறவிகளாகவும், கன்னியாஸ்திரியாகவும் மாறுவதற்கு முழு சுதந்திரம் உண்டு..
4. பெண்களுடைய அழகு என்பது ஆடை, அணிகலன், கூந்தல் போன்றவற்றிலிருந்து பெறுவது கிடையாது. உள்ளத்திலிருந்து வரக் கூடிய அன்பு, அடக்கம், அச்சம் போன்றவற்றில் பெறப் படுகிறது.
5. பெண்கள் திருமணம் செய்யும்பொழுது தூய்மையானவர்களாக இருக்க வேண்டும். விதவை, மறுமணம், பாலியல் தொழிலாளிகளை திருமணம் செய்வது தவறு. தூய்மையானவர்களை மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்கிறது.
6. பெண்கள் பெற்றோரை மதித்து நடந்திட வேண்டும், பெற்றோரை மதிக்காதவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்கிறது.
7. பெண்கள் ஆலயங்களில் அமைதியைக் கடைப்பிடித்திட வேண்டும். அதே போல் அங்கு எந்த கேள்வியும் கேட்கக் கூடாது, பேசவும் கூடாது.
8. பெண்கள் மாதவிடாய் நேரங்களில் யாரும் அவளை தொடக்கூடாது. அவள் பயன்படுத்தும் பொருட்களை தொட்டு விடக்கூடாது. அவ்வாறு செய்யும் பொழுது, உடனே குளிக்க வேண்டும், துணிகளை துவைத்திட வேண்டும், இல்லையென்றால் மாலைவரை அவர் தூய்மையற்றவராக இருப்பார்.
9. ஒரு பெண், ஆண் குழந்தையை ஈன்று எடுக்கும்பொழுது ஒரு வாரம் தூய்மையற்றவளாக இருப்பாள். ஆனால் பெண் குழந்தையை ஈன்று எடுத்தால் இரண்டு வாரங்கள் தூய்மை யற்றவளாக இருப்பாள்.
10. ஆண்கள், பெண்களை ஆளப்பிறந்தவர்கள். பெண்கள் குழந்தை பிறப்பு வலியை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக கடவுள் உருவாக்கியுள்ளார் என்கிறது.
11. பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாது. ஆனால் வீட்டில் ஆண் வாரிசு இல்லாத பட்சத்தில் பெண்களுக்கு பங்கு உண்டு என்கிறது.8

**புத்தமதம்**

1. புத்தமதத்தில் பெண்களுடைய நிலை என்பது பிற மதங்களைவிட சற்று முன்னோக்கிதான் செல்கிறது. பெண்களை மதிப்போடும், மாண்போடும் நடத்து கிறது. புத்த வழியில் அமைதியை நிலை நாட்டுவதே இதன் கோட்பாடுகளில் ஒன்று.
2. பெண்களை மாண்போடும், மதிப்போடும் நடத்திட வேண்டும் என்பது அடிப்படைக் கோட்பாடு.
3. பெண்களை ஆன்மிக வழியில் நடத்திச் செல்வதும், வாழ்வில் உயர்வான இடத் திற்கு இட்டு செல்ல வேண்டும். சமுதாய வடிவமைப்பைப் பற்றி எந்தவிதமான பாகுபாடும் இல்லை.
4. பெண்களை வழிபாட்டுத் தலங்களில் அனுமதிப்பது மற்றும் துறவிகளாகவும், ஆன்மீகத்தில் ஈடுபடலாம் என்கிறது.
5. ஆணுக்குப் பெண் நிகரானவர்கள். இதுவே பெண் சமத்துவத்தைப் பற்றி பேசிய முதல் மதமாகும்.
6. பெண்கள் தங்களுடைய கணவருக்கு எந்த தீங்கும் நினைத்திடக் கூடாது.
7. பெண்கள் கொடூரமாகவோ அல்லது வன்முறையிலோ ஈடுபடக் கூடாது.

8. பெண்கள் முதியோரிடமும், பிறரிடத்திலும் அன்பாக இருந்திட வேண்டும்.
9. அனைவராலும் மதிக்கப்படுபவளாக, மரியாதைக்குரியவளாக சமூகத்தில் ஏற்றுக் கொள்ளும் வகையில் நடந்திட வேண்டும்.[9]

மதங்கள் யாவும் பாவம் புண்ணியத்தை வலியுறுத்துகிறது. நிகழ்காலத்தில் ஏற்படும் துன்பங்களுக்கு முன்பிறவியில் மேற்கொண்ட தீவினை என்னும் கருத்தியலை முன்வைக்கிறது. இதன் தொடர்ச்சியாகத் தான் விதவையைப் புறக்கணித்தல், புரோகித நடைமுறை, ஜோதிடப் பலன் சமூகத்தில் வினையாற்றுகிறது.

## சான்றெண் குறிப்பு

1. ஜார்ஜ் டிமிட்ரோவ் - மதங்களின் பார்வையில் பெண்கள், ப. 22/ www.freetamilebooks.com/
2. மேலது,ப.23
3. மேலது,ப.23
4. மேலது,ப.24
5. மேலது,ப. 24
6. மேலது,ப.25
7. மேலது,ப.26
8. மேலது,ப.26
9. மேலது,ப.27

# ஆற்றுப்படை இலக்கியங்களில் கலைஞர்கள்

*க. ஜோதிமுருகன்*
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப் பட்டி, திருநெல்வேலி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5047

## முன்னுரை

செவ்வியல் இலக்கியம் ஆகிய சங்க இலக்கியங்கள் சங்க கால மக்களின் வாழ்வியலை உணர்த்துவன. அவற்றுள் சிறிய பாடல்கள் எல்லாம் எட்டுத்தொகையுள் அடங்கி விட, பத்து பெரிய பாடல்களின் தொகுதி பத்துப்பாட்டு எனப் பெயரிடப்பட்டது. பத்துப்பாட்டில் செம்பாதி நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களில் இசையோடு தொடர்புடைய கலைஞர்களாகிய கூத்தர், பாணர், பொருநர் ஆகியோரைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. வறுமையால் வாடும் கலைஞன் ஒருவனை வள்ளலிடம் பரிசில் பெற்று வந்த மற்றொரு கலைஞன் ஆற்றுப்படுத்துவதாக ஆற்றுப்படை இலக்கியங்கள் அமைந்துள்ளன. ஆற்றுப்படைகளில் இடம்பெற்றுள்ள கலைஞர்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு கட்டுரை அமைந்துள்ளது.

## ஆற்றுப்படைகள்

தமிழினத்தின் தொன்மை நாகரிகத்தைப் உலகிற்கு உணர்த்துபவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்கள் என்று பாராட்டப்படுவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இது பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று கூறும் மரபும் உண்டு. சங்க இலக்கியங்கள் சங்க கால சமுதாயத்தில் பிரதிபலிப்புகள். அவற்றுள் பத்துப்பாட்டு ஒரு பண்பாட்டுச் சுரங்கமாகவும், வரலாற்றுப் பெட்டகமாகவும், கலைகளின் இருப்பிடமாகவும் திகழ்கிறது. பத்துப்பாட்டு நூல்களில் செம்பாதி நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை என்பது ஒருவகையான பாடல் மரபு உடையது. ஆறு என்னும் சொல்லுக்கு "வழி" அல்லது "நெறி" என்பது பொருளாகும். ஆற்றுப் படுத்துதல் என்பது வழிப்படுத்தல் என்று பொருள்படும். புரவலனை காணாது வறுமையில் வாடுகிறான் ஒரு கலைஞன். புரவலன் ஒருவனைக் கண்டு பரிசில் பெற்றுச் சீரும் சிறப்புமாகத் திரும்புகிறான் மற்றொரு கலைஞன். பரிசில்கள் பெற்றுவரும் கலைஞன் வறுமையில் வாடும் கலைஞனை பார்க்கிறான். அவன் வாழ வழி காட்டுகிறான்.

### ஆற்றுப்படைகளில் கலைஞர்கள்

கலைஞன் இயற்கையிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் தான்பெற்ற அனுபவங்களை உணர்ச்சியுடன் வெளிப்படுத்தும்போது அவை கலையாக பரிணமிக்கின்றன. இத்தகைய கலைஞர்களை உணர்ச்சிக் கலைஞர்கள் என்று கூறலாம். ஆற்றுப்படையின் இடம்பெறும் கலைஞர்கள் படைப்புத் திறனை பொறுத்தே வேறுபடுத்தப்படுகின்றனர். உணர்ச்சி கலைஞர்களை பாடல் மற்றும் ஆடல் என்பதன் வழி இரண்டு வகைகளில் பாகுபடுத்தலாம். பாடல் கலைஞர்களாக பாணர், அகவர், விறலி ஆகியோர் இடம் பெறுவர். ஆடல் கலைஞர்களாக கூத்தர், விறலி, பொருநர், வயிரியர், கோடியர் ஆகியோர் இடம்பெறுவர். ஆற்றுப்படை கூறிய கலைஞர்கள் வாழ்க்கை முறையிலும், தொழில் முறையிலும் சில வகைகளில் வேறுபட்டவர்கள். ஆனால் அவர்கள் அனைவரும் கலையையே தொழிலாகக் கொண்டதில் ஒன்றுபட்டவர்கள்.

மக்கள் குழுவாக வாழத் தொடங்கிய காலத்தில் குழு வளர்ச்சி பெறும்பொழுது, வேலைப்பிரிவினை தோன்றுகிறது. அப்போது ஆடல், பாடல்களில் வல்லவர்களுக்கு கூத்தும், பாட்டும் தொழிலாகிவிடுகிறது. இந்நிலையிலேயே பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்றவர் ஆடல் மற்றும் பாடல்களை தொழிலாகக் கொண்டவர்களால் ஆன ஒரு சமூகப் பிரிவு தோன்றியது. நாளடைவில் இவர்கள் கலையை வளர்த்தனர். தங்கள் வாழ்க்கையை அதனைக்கொண்டு நடத் தினர். ஆற்றுப்படை நூல்களில் இசை சார்ந்த கலைஞர்களாகிய பாணர், பொருநர், கூத்தர் ஆகியோரின் வாழ்வியல் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பாணர் என்பார் பாடுகின்ற பழைய குலத்தை சேர்ந்தவர். இப்பாணர் மரபினர் சிறுபாணர், பெரும்பாணர் என்று இரு வகையினராவர். ஏழு நரம்புகள் உள்ள சீறியாழ் கொண்டு பாடுவோர் சிறுபாணர் என்றும், இருபத்தியொரு நரம்புகள் உள்ள பேரியாழ் கொண்டு பாடுவோர் பெரும்பாணர் என்றும் வகைப்படுத்தப்படுவர். இதனை,

**"இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி"[1]**

என பெரும்பாணாற்றுப்படையிலும்,

**"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"[2]**

என பெரும்பாணாற்றுப்படையிலும் குறிப்பிடுவதன் மூலம் உணரலாம்.

'பண்' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து, முதல் நீண்ட 'பாண்' என்ற சொல் 'அர்' என்னும் பலர்பால் இறுதிப்பெற்று, 'பாணர்' என்றாயிற்று என்றும், பாட்டை ஆள்வோர் பாணர் என அழைக்கப்பட்டனர் என்றும் பாணர் என்ற சொல்லிற்கு பொருள் கொள்ளலாம்.

கூத்தர் என்பவர் கூத்து என்னும் கலை நிகழ்த்துவதில் சிறந்தவராவார். இவர்கள் தனி கூத்திலும் கதை தழுவிவரும் கூத்திலும் வல்லவர்களாவர். கூத்தர்களுக்கு கண்ணுளர், வயிரியர், கோடியர் என வேறு பெயர்களும் உண்டு.

பொருநர் என்பவர் மற்றொருவர்போல் வேடம் கொண்டு பாடுவோராவர். இவர்கள் ஏற்களம் பாடும் பொருநர், போர்க்களம் பாடும் பொருநர், பரணி பாடும் பொருநர் என மூன்று வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பாணர், கூத்தர், பொருநர் என்ற இசைக் கலையோடு தொடர்பு கொண்ட கலைஞர்கள் தத்தம் கலைத் திறமையால் பாகுபடுத்தப்பட்டனர் என்றாலும் அவர்கள் அனைவரையும் பாண் சுற்றத்தினர் என்றே அழைத்தனர். ஏனெனில் மற்ற கலைஞர்களை விட பாணனே இலக்கியத்தில் அதிக இடத்தைப் பெறுகிறான்.

**கலைஞர்களின் மரபுகள்**

கலைஞர்கள் காட்டில் உறையும் தெய்வத்தை வழிபடும் முறை, கோவிலில் வழிபடும் முறை, நடுகல் வழிபாட்டு முறை, அரசனை கண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று பல மரபுகளை கடைபிடித்து வந்தனர். தொழில் முறை கலைஞர்கள் இடம், பொருள், ஏவலுக்கு ஏற்றபடி தமக்கென்று பல முறைகளை வகுத்துக்கொண்டு அதனின்றும் மாறாமல், அதனைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தனர்.

கலைஞனின் மரபுகளுள் வழிப்படுத்துதலும், நல்லிணக்கமும் அடங்கும். புரவலனிடம் பரிசு பெற்று வரும் கலைஞன் வறுமையுற்ற கலைஞனிடம் புரவலனின் தன்மைகளைக் கூறி வழிப்படுத்துகிறான். இதன்வழி, கலைஞர்களிடையே காணப்படும் நல்லிணக்கம் மற்றும் நட்புறவினை அறிந்து கொள்ள முடிகிறது.

**வறுமை வழிப்படுத்துதல்**

கலைஞர்களின் வறுமை நிலை பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப்படையில் சிறுபாணனின் வறுமைநிலை கூறப்பட்டுள்ளது. எங்களது வீட்டு நாய் எங்கள் வீட்டுச்சமையலறையில் குட்டி போட்டிருந்த்து. கண்ணைக்கூடத் திறவாத அந்த நாய்க்குட்டிகள் தாயின் மடியில் பால் குடிக்கக் கவ்விச் சுவைத்தன. தாய்நாயின் மடியில் பால் இல்லாததால் வலி பொறுக்க முடியாமல் அது தன் குட்டிகளைப் பார்த்துக் குரைத்தது. வைரம் பாய்ந்தது போன்ற எங்களது வீட்டுச் சுவர் கட்டுடைந்து கறையான் அரித்த புழுதியோடு காளான் பூத்திருந்தது. உடுக்கை அடித்துக் கொண்டு ஆடும் என் மனைவியின் வயிறு பசியால் ஒடுங்கி இளைத்த இடையோடு ஒட்டிப்போயிருந்தது. அவள் குப்பையில் முளைத்திருந்த வேளைக் கீரையைத் தன் வளைந்த நகத்தால் கிள்ளி வந்தாள். உப்புக் கூட இல்லாமல் அதனை வேக வைத்தாள். இதைப்போய் சாப்பிடுகிறார்களே என்று அறிவுக் குறைந்த மடவோர் ஏளனம் செய்வார்களே என்று எண்ணி வாயில் கதவைச் சாத்தி வைத்துவிட்டுப் பெருஞ் சுற்றத்தாரோடு கூடியிருந்து உண்ணக்கூட முடியாமல் ஏதோ பிசைந்து கவளமாக்கிக் கன்னத்தில் கண்ணீர் வழிய விழுங்கிக் கொண்டிருந்தோம். இதுதான் எங்கள் குடும்பத்தின் அந்நாளைய அழிபசி வருத்தம் என்று சிறுபாணன் கூறுகிறான்.

**டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவா பால்முலை கவர்த னோனாது**

. . . .

. . . .

**மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்3**

இதன் வழி, சிறுபாணர்களின் குடும்பத்தின் வறுமைநிலை விளக்கப்பட்டுள்ளது. கலைஞர்களின் வறுமைநிலையே அவர்களை புரவலனிடம் செல்ல வேண்டும் என்று வழிப்படுத்துகிறது.

**கலைஞர்கள் பெற்ற விருந்தோம்பல்**

வறுமையுற்ற கலைஞர்கள் வள்ளல்களையோ அல்லது மன்னர்களையோ காணச் செல்கின்ற போது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளை சார்ந்த மக்கள் வாழ்கின்ற இடங்களையும் கடந்து செல்கின்றனர். அப்பொழுது ஐந்திணை சார்ந்த மக்களும் கலைஞர்களை தம் விருந்தினர்களாக ஏற்று அவர்களை உபசரிக்கும் விருந்தோம்பல் பண்பு ஆற்றுப்படை நூல்களில் காணப்படுகின்றது. ஐந்திணை சார்ந்த மக்களின் உணவுகளில் பெரும்பாலும் கள் மற்றும் ஊண் உணவு இடம்பெற்றுள்ளது.

பாணர்கள் இளந்திரையனை காண செல்லும் வழியில் எயிற்றியர்கள் குடிசையில் தங்குவர். எயிற்றியர்கள் தேக்கிலையில் தெய்வத்திற்கு உணவு பலியிடும் வழக்கம் உடையவர்கள். விருந்தினராக வரும்

பாணர்களுக்கும் தெய்வத்திற்கு பலியிடுவது போன்று தேக்கிலையில் வைக்கப்பட்ட உணவை படைத்து கொடுப்பர்.
இதனை,

**தெய்வ மடையின் தேக்கிலை குவைஇ,நும்"[4]**

என்ற அடி பாணர்களை மதித்துப் போற்றிய எயிற்றியர்களின் விருந்தோம்பல் பண்பை உணர்த்துகிறது. சங்க கால மக்கள் தாங்கள் வாழ்ந்த ஐவகை நிலத் தோற்றத்திற்கேற்ப உணவு முறைகளைப் பின்பற்றியுள்ளதோடு, தங்களை நாடிவரும் விருந்தினருக்கு உணவு வழங்கும் விருந்தோம்பலையும் பின்பற்றியுள்ளனர். கலைஞர்கள் மன்னனைக் காணச்செல்லும் முன்பே ஐந்திணைச் சார்ந்த மக்களின் விருந்தோம்பலை பெறுகின்றனர்.

## இரவலர்களும் புரவலர்களும்

வறுமையுற்ற கலைஞர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்காக வள்ளல்களையோ அல்லது மன்னர்களையோ நாடிச்சென்றனர். ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் கலைஞர்கள் மன்னர்களை நாடிச்சென்று பொருள் பெற்று திரும்பி வருவதாக அமைந்துள்ளன. ஆற்றுப்படை நூல்களில் மன்னர்கள் கலைஞர்களை எவ்வாறு விருந்தோம்பினர் என்பதை பல பாடல்வரிகள் அழகாக எடுத்துரைக்கின்றன.

பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையன் பெரும்பாணர்களை உபசரித்த விருந்தோம்பல் பண்பு அழகாகக் கூறப்பட்டுள்ளது. அழுக்கடைந்த பாசி போன்ற கந்தல் ஆடையுடன் வந்த பாணர்களைக் கண்ட இளந்திரையன் வெண்புகை போன்ற நூலால் செய்யப்பட்ட ஆடையைப் பாணனும் அவனுடைய சுற்றத்தாரும் மணியம்படி கொடுத்தான்.
இதனை,

**"பாசி அன்ன சிதர்வை நீக்கி**
**ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்"[5]**

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

புலவர்கள் இரவலர்களை கண்டதும் அவர்களை வேற்றுமையாக தோன்ற செய்யும் கந்தையை நீக்கி சிறந்த ஆடையை உடுக்கச் செய்வர். ஏனைய ஆற்றுப்படை களும் இச்செய்தியை எடுத்துரைக்கின்றன.

**"நீசில மொழியா அளவை மாசில்**
**காம்புசொலித் தன்ன அறுவை உடீஇ"[6]**

என்ற சிறுபாணாற்றுப்படை வரிகள் சிறுபாணனுக்கு ஆடை வழங்கப்பட்டதை புலப்படுத்துகின்றன.

சுவையான அமுதம் போன்ற உணவு வகைகளையும் பாணர்கள் விரும்பும் நிலையில் தொண்டைமான் இளந்திரையன் அவர்களின் உடனிருந்து முகமலர்ந்து குறையாத விருப்பத்துடன் ஊட்டினான். தான் நின்று ஊட்டுவது என்பது அரசனே அவர்கள் உண்ணும் போது எதிரே நின்று முகமலர்ந்து மொழிந்து மேலும் உண்ணச் செய்வதாகும்.

**"முகத்தா னமர்ந்தினிது நோக்கி அகத்தானும்**
**இன்சொ லினதே அறம்"[7]**

என்ற குறள்வழி, முகத்தாலும் மனத்தாலும் இன்சொல் கூறுவதே அறம் என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். மன்னர்கள் கலைஞர்களை முகமலர்ந்து வரவேற்று விருந்தோம்பியுள்ளனர் என்பதற்கு மேற்கண்ட செய்திகள் சான்றாகின்றன.

## பெண்பாற் கலைஞர்கள்

சங்க காலம் பெண்களுக்கும் பெண்கலைஞர்களுக்கும் முன்னுரிமை அளித்துள்ளது. ஆற்றுப்படை இலக்கியங்களில் பெண்பாற் கலைஞர்களாக பாடினி மற்றும் விறலியர் இடம்பெற்றுள்ளனர். பொருநராற்றுப்படையில் பொருநனின் மனைவி பாடினி என்றும், புறநானூற்றில் பாணன் மனைவி பாடினி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருநர்,

பாணர், கூத்தர் யாழ் மீட்டிப் பாடும்போது பாடலின் இசைக்கேற்ப, நடனம் ஆடுபவள் விறலி ஆவாள். சிறுபாணாற்றுப்படை விறலியின் இயல்பை விளக்குகிறது. பொருநராற்றுப்படை பாடினியின் இயல்பை விளக்குகிறது.

## முடிவுரை

ஆற்றுப்படைகளில் கலைஞர்கள் பற்றிய செய்திகள் இடம்பெறும் பல இடங்கள் உள்ளன. சங்க காலத்தில் கலைஞர்கள் தம் கலைத்திறமையால் வாழ்ந்துள்ளனர். கலைஞர்களை புரக்கும் மன்னர்கள் கலைஞர்களின் திறமையை போற்றி, பரிசிளித்து, கலைஞர்களோடு கலைஞனின் திறமையையும் வாழ வைக்கின்றனர். இருப்பினும், வறுமைநிலையே கலைஞர்களின் அடையாளமாக கூறப்பட்டுள்ளது. கலைஞர்களை மன்னனும், ஐந்திணை சார்ந்த மக்களும் விருந்தோம்பி வரவேற்கின்றனர். பெண்பாற் கலைஞர்களும் ஆற்றுப்படையில் இடம்பெற்று தனிச் சிறப்பு பெற்றுள்ளனர். கலைஞர்கள் பற்றிய செய்திகள் ஆற்றுப்படையில் அதிக இடங்களில் கூறப்பட்டாலும், நன்கு பயின்ற நிலையிலும் வறுமையில் வாடுபவர்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## தொகுப்புரை

வறுமையால் வாடும் கலைஞன் ஒருவனை வள்ளலிடம் பரிசில் பெற்று வந்த மற்றொரு கலைஞன் ஆற்றுப்படுத்துவதாக ஆற்றுப்படை இலக்கியங்கள் அமைந்துள்ளன.

பொருநர், பாணர், கூத்தர், விறலி, பாடினி ஆகிய கலைஞர்கள் பற்றிய செய்திகள் ஆற்றுப்படையில் இடம்பெற்றுள்ளன.

கலைஞர்கள் உணர்ச்சிக் கலைஞர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். கலைஞர்களில் பாணர், பொருநர், கூத்தர், விறலி, பாடினி ஆகிய இசை மற்றும் நடனம் சார்ந்த கலைஞர்களே இடம்பெற்றள்ளனர்.

பெண்பாற் கலைஞர்களான பாடினி மற்றும் விறலி பற்றிய செய்திகள் தனிச் சிறப்போடு இடம்பெற்றுள்ளன.

கலைஞர்களின் வறுமைநிலை அவர்களை புரவலனிடம் செல்லுமாறு வழிப்படுத்தியது என்பது போல பல வறுமைநிலை காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மன்னர்கள் கலைஞனை வரவேற்று விருந்தோம்பும் நிலையும், பல பரிசுகள் வழங்கும் நிலையும் காணப்படுகின்றன.

ஐந்திணை சார்ந்த மக்களும் கலைஞர்களை விருந்தினராக ஏற்று விருந்தோம்பும் நிலையும் காணப்படுகின்றன.

கலைஞர்கள் பலவகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களிடையே வேற்றுமை இருப்பினும் கலையால் அவர்கள் ஒன்றுபட்டுள்ளனர்.

## அடிக்குறிப்புகள்

1. பத்துப்பாட்டு, சுப்பிரமணியன்.ச.வே., (உ.ஆ), பாடல்வரி - (பெரும்.பா.462), முதற்பதிப்பு - அக், 2003, கலாஷேத் திரா அச்சகம், சென்னை - 41.
2. மேலது, பாடல்வரி - (சிறுபா.35)
3. மேலது, பாடல்வரி - (சிறுபா. 130 - 140)
4. மேலது, பாடல்வரி - (பெரும்.பா. 104)
5. மேலது, பாடல்வரி - (பெரும். பா : 468-469)
6. மேலது, பாடல்வரி - (சிறுபா. 235 - 236)
7. திருக்குறள், ஆச்சார்யா.பி.எஸ், (உ.ஆ), பாடல் எண் - 93, பதிப்பு -2016, நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தியாகராய நகர், சென்னை -17.